# இடைவிடாமல்  ஜெபம்பண்ணுங்கள்/ Pray continually

Praise the Lord:
Let us pray. ..
"தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" என்ற வார்த்தையின்படியே கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, ஆட்கொள்வாராக. ஆமென்.

1 தெசலோனிக்கேயர்/1 Thessalonians 5:17 (பக்கம் 282)
இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.
pray continually; (NIV) Never stop praying. (NLT) pray without ceasing, (KJV)
Be unceasing in prayer [praying perseveringly]; (AMP) Pray at all times (GNB)

*Ref: Dictionary:* without intermission, incessantly, without ceasing
இடைவிடாமல், சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்கிற நாம், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருக்கின்றோம்.

1. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.
ஜெபிக்கும்பொழுது தேவனுக்கும் நமக்கும் இடைவெளியில்லாமல், அதாவது எந்தவித தடைகளும் இல்லாமல் ஜெபிக்கவேண்டும்.
*(Ref: Assistant Pastor Brother Sri, Tamil Christian Prayer Church, canada)*

2. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.
"நாம் ஜெபிப்பதைத்தவிர வேறு எதுவுமே செய்யாமல் நாள்முழுவதும் தினம் ஜெபித்துக்கொண்டேயிருக்கவேண்டும் என்பது இக்கட்டளைகளின் அர்த்தம் அல்ல.
நாம் ஒருநாள் ஜெபித்துவிட்டு மறுநாள் ஜெபிப்பதை கைவிடுபவர்களாக இருக்கக்கூடாது என்பதையே இந்த கட்டளை அறியத்தருகின்றது. மேலும் நாம் ஜெபிப்பதற்காக ஒதுக்கி வைத்திருக்கும் நேரத்தில் மாத்திரம் ஜெபிப்பவர்களாக இராமல், ஜெபம் நம்முடைய வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கும் விதத்தில், நம்முடைய அன்றாட வாழ்வின் சகல காரியங்களிலும் ஜெபத்தையும் உள்ளடக்கியவர்களாக நாம் வாழவேண்டும்.
ஜெபிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் வார்த்தைகள் வெளிப்படும் விதத்தில் ஜெபிக்கும் நாம் ஏனைய நேரங்களில் மனதிற்குள் ஜெபிப்பவர்களாக இருக்கவேண்டும்.
உண்மையில், "நம்முடைய வாழ்வு ஒவ்வொரு நிமிஷமும் தேவனிலேயே சார்ந்திருக்கிறது என்பதையும், நம்மடைய ஒவ்வொரு மூச்சும் தேவனுடைய ஈவாகவே இருக்கிறது என்பதையும் உணருகின்ற விதத்தில் எப்பொழுதும் ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும்." இதனால், நாம் நாள் முழுவதும் நம்முடைய சகல காரியங்களையும் குறித்து தேவனோடு பேசுகிறவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் எந்த நேரமும் ஜெபத்திற்கு ஏற்ற நேரமாகவே இருக்கின்றது.
(Ref: Sathiyavasanam Journal 2009 Jan-Mar. Written by M.S.Vasanthakumar)

இப்படியாக, நாம் எப்பொழுதும் கர்த்தரையே சார்ந்து இருந்தால், கர்த்தருக்கும் நமக்கும் இடைவெளியோ தடையோ இருக்காது.

3. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.
நாம் ஜெபிக்கும்போது, நமது வாயின் வார்த்தைக்கும் இருதயத்தின் நினைவுக்கும் இடைவெளி இல்லாமல் பாாத்துக்கொள்ள வேண்டும். அதாவது ஜெபிக்கிற நமது வாயின் வார்த்தைகளும் அந்த நேரத்திலே நமது இருதயத்தின் நினைவுகளும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும்.

மத்தேயு/Matthew 15:8 (பக்கம் 23)
இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது;
" 'These people honor me with their lips, but their hearts are far from me. (NIV)

*நம்முடைய அன்றாட வாழ்க்கையை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.....*

1. நான் என் மனைவியிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். (1 காரியம்)
2. நான் அப்படிப் பேசிக்கொண்டே நாங்கள் TV யில் செய்திகளைப் பார்க்கிறோம். (2 காரியங்கள்.)
3. இதோடு நான் computer லும் work பண்ணுகிறேன். (3 காரியங்கள்).
4. சிலசமயம் Computer லே 2 காரியங்களை செய்வேன். (4 காரியங்கள்..)
5. இவைகளுக்கு மத்தியிலே, என் உள்ளான இருதயத்திலே ஒரு ஜெபம் அல்லது தேவனோடு பேசுகிற ஒரு காரியமும் இருக்கலாம். இருக்கலாம் என்று சொல்வதைவிட இருக்கவேண்டும் என்று சொல்வது சரி. (இப்போ 5 காரியங்கள்.)

இப்படியே நீங்கள் அமர்ந்திருந்து எத்தனை காரியங்களை நீங்கள் ஒரே நேரத்தில் சிந்திக்கலாம்/செயல்படுத்தலாம் என ஆராய்ச்சி செய்து சொல்லுங்கள்.

எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?
The heart is deceitful above all things and **beyond cure**. Who can understand it? (NIV) (Jeremiah 17:9)

நாம் அன்றாட வாழ்க்கையிலே ஒரு காரியத்தைப் பாக்கிறபோது நமக்கு ஏற்படுகிற இருதய உணர்வுகளும் அதன்பிறகு நமது செயல்முறைகளும் ஒன்றுபட்டிருக்காது. பல நேரங்களிலே வித்தியாசப்படும். அமர்ந்திருந்து ஆராய்ந்து பாருங்கள்.......

ஜெபியுங்கள், கர்த்தர் வார்த்தைகளின் மூலமாக உணர்த்துவார்.

நான் ஜெபிக்கும்போது, எனது வாயின் வார்த்தைக்கும் இருதயத்தின் நினைவுக்கும் இடைவெளி இல்லாமல், ஒன்றுபட்டு இருக்கவேண்டுமென வாஞ்சிக்கும்போது, எனது பெலவீனங்களிலே நான் அழிந்து போகாமல், என்னைப் பெலப்படுத்துபவர் என் கன்மலையும் மீட்பருமாகிய கிறிஸ்து ஒருவரே. ஆமென்.

இதை கிறிஸ்து பிறப்பதற்கு, பல வருடங்களுக்கு முன்பே தாவீது உணர்ந்தார்....

சங்கீதம்/Psalms 19:14 (பக்கம் 681)

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
May the words of my mouth and the meditation of my heart be pleasing in your sight, O LORD, my Rock and my Redeemer. (NIV)

...*இப்படியிருக்க*, கன்மலையும் என் மீட்பருமாகிய கிறிஸ்து ஒருவரே உதவி செய்யவல்லவர்.

எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.
we take captive every thought to make it obedient to Christ. (NIV) (2 Cor. 10:5)

*நமது எண்ணங்களைச் சிறைப்படுத்தி...இருதயத்தை ஒருமுகப்படுத்துவோம்....*

நாம் ஜெபிக்கும்போது, நமது வாயின் வார்த்தைக்கும் இருதயத்தின் நினைவுக்கும் வித்தியாசம் இல்லாமல் ஒன்றுபட்டு இருந்து நாம் ஒரு வாக்குத்தத்தத்தை வைத்து ஒரு ஜெபத்தை ஏறெடுத்தால், நமக்காக நம் மத்தியிலே இப்போ வாசம் செய்து, நமக்காக வேண்டுதல் செய்யும் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் இப்பொழுதே பதில் தருவார். ஆமென்.

அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தி உயர்த்த ஒரு வசனம்,
நம்மை அவருக்கு முன்பாக தாழ்த்த ஒரு வசனம்,
அவர் நமக்கு செவிகொடுப்பதற்காக நன்றி சொல்லி ஒரு வசனம்,
அவரிடம் நம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க ஒரு வாக்குத்தத்தம் சொல்லி ஜெபித்தால்.....

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்....(ஏசா. 65:24) என்று வாக்குக்கொடுத்துள்ள நம் ஆண்டவர் நிச்சயம் நம் மத்தியிலே நம் ஜெபங்களுக்கு பதில் தருவார். ஆமென்.

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.
praying always with all prayer and supplication in the Spirit, being watchful to this end with all perseverance and supplication for all the saints—(NKJV) (Ephesians 6:18)

நம் வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் நினைவுகளும் ஒன்றுபட்டவிதமாக தேவனை நோக்கி கிறிஸ்து மூலமாக மன்றாட, கிறிஸ்துவுக்குள் பெலப்பட்டு, எழுந்து நிற்போம்.

**Let us pray. ..**

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.